DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S. No.108/2017

Defendant side witness for D.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | ...திரு. கணேசன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.10.2025.**

<u>முதல்விசாரணை:–</u>

நான் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தில் உதவி செயற்பொறியாளராக உடன்குடி பிரிவில் பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து உதவி பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை பெற்று அவர் இன்று தற்செயல் விடுப்பில் இருப்பதால் மேற்படி பொறுப்பில் இருக்கும் நான் அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள ஆவணங்களுடன் சாட்சியமளிக்க வந்துள்ளேன். உடன்குடி கிராமம் சோமநாதபுரம் விவசாய சர்வீஸ் எண். F458 என்பது P.ஞானமுத்து என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி மின்இணைப்பிற்கு P.ஞானமுத்து என்பவர் டரிப் 6(தற்காலிக மின்இணைப்பு) கோரி முதலில் விண்ணப்பம் செய்து, டரிப் 6ன் கீழ் சர்வீஸ் எண்.2036 என்ற இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்பு அவர் அளித்த விண்ணப்பத்தின் பேரில் டரிப் 5(வணிக மின்இணைப்பு) ஆக மாற்றம் செய்யப்பட்டு சர்வீஸ் எண். 2036ன் கீழ் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்பின்பு அவர் அளித்த விண்ணப்பத்தின் பேரில் டரிப் 4(இலவச விவசாய மின்இணைப்பு) ஆக மாற்றம் செய்யப்பட்டு சர்வீஸ் எண்.373-002-458 வழங்கப்பட்டுள்ளது. இதை காட்டக்கூடிய ஆவணங்கள் சா.சா.ஆ- 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மின்இணைப்பு உடன்குடி கிராம புல எண்.243/3ல் உள்ளது. மேற்படி மின் இணைப்பிற்கான தற்போதைய நிலையை காட்டக்கூடிய Extract of consumer ledger சா.சா.ஆ-9 ஆகும். மேற்படி மின்இணைப்பு 1974ல் வழங்கப்பட்டு நாளதுதேதிவரை ஊர்ஜிதத்தில் உள்ளது. மேற்படி மின்இணைப்பு எந்த எந்த ஆவணங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று சொல்ல முடியுமா என்றால் ஆவணங்களில் அது துலங்கவில்லை. பொதுவாக மின்இணைப்பு வழங்குவதற்கு எந்த எந்த ஆவணங்களை பரிசீலனை செய்வோம் என்றால் பட்டா, சிட்டா, அடங்கல்

மற்றும் விண்ணப்பதாரரின் அடையாள அட்டை ஆகியவற்றை பரிசீலனை செய்வோம்.

குறுக்குவிசாரணை (வாதிதரப்பில்)

பொதுவாக வணிக மின்இணைப்பு, இலவச விவசாய மின்இணைப்பு வழங்குவதற்கு முன்பு கள ஆய்வு செய்து இணைப்பு வழங்குவோம் என்றால் சரிதான். ஒரு சர்வே எண்ணிற்கு வழங்கப்பட்ட இலவச மின்இணைப்பை வேறு சர்வே எண்ணிற்கு இலவச மின்இணைப்பாக மாற்ற முடியாது என்றால் சரிதான். இலவச மின்இணைப்பை விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்துகிறார்களா என்று அவ்வவ்போது ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்து வைத்திருப்போம் என்றால் சரிதான். இந்த சர்வீஸ் எண்ணிற்கு கடைசியாக எப்பொழுது ஆய்வு செய்யப்பட்டது என்றால் நாங்கள் ஆய்வு செய்யவில்லை. உடன்குடி கிராம சர்வே எண். 243/3 ல் தற்போது விவசாயம் நடக்கிறதா இல்லையா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இதற்குண்டான மின் மீட்டர் எந்த இடத்தில் உள்ளது என்றால் எந்த சர்வே எண்ணில் வழங்கப்பட்டுள்ளதோ அந்த சர்வே எண்ணில் இருக்கும். முறையற்ற முறையில் எங்களுடைய துறையின் அனுமதியின்றி மேற்படி மின்மீட்டரை ஒரு இன்ஞ் கூட நகர்த்த முடியாது என்றால் சரிதான்.

குறுக்குவிசாரணை (1 ம் பிரதிவாதிதரப்பில்)

சா.சா.ஆ–9 ல் உள்ள சர்வே எண் தட்டச்சு பிழை காரணமாக சர்வே எண். 234/3 என்பது சர்வே எண்.243/3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆவணங்களை சரிபார்த்துதான் போடப்பட்டுள்ளது. சர்வீஸ் எண்.373–002–458 ஞானமுத்து நாடார் என்பவர் பெயரில் சர்வே எண். 234/3 ல்தான் உள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.